



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர்கிராமம் பொருநை அருங்காட்சியகப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ,கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் எம்பி ஞானதிரவியம்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், தினேஷ்,தொல்லியல் துறை இயக்குனர் யத்தீஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.அதனை தொடர்ந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் — டிச.20ல் திறந்து வைக்கிறார்!

# பாளையங்கோட்டை - குலவணிகர் கிராமம் 'பொருநை அருங்காட்சியகம்' பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு — தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

நெல்லை, டிச.10-

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்கிராமம் பொருநை அருங்காட்சியக பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ., திரு நெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, தொல்லியல் துறை இயக்குநர் து.யத்தீஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று (09.12.2025) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றினை உலகறியச் செய்யும் பொருட்டு கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருட்களை காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம் குலவணிகர்புரம் கிராமத்தில் அருங்காட்சியகம் அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. பொதுப்பணித்துறை சார்பில் ரூ.56.60 கோடி மதிப்பீட்டில் 13 ஏக்கர் நிலத்தில் 54 ஆயிரம் சதுர அடியில் ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டடம் 16,486 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளமும், சிவகளை கட்டடம் 8,991 சதுர அடியில் தரைதளம், முதல் தளமும், கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17,429 சதுர அடி தரைதளம்,முதல் தளத்துடன் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும், ஒவ்வொரு கட்டடத்திற்கு இணைப்பு சாலை அமைக்கவும், அழகுநிறைந்த குளமும், குளத்தின் மீது பாலம் அமைக்கவும், சுற்றுச்சுவர், பூங்காக்கள், வண்ண விளக்குகள், நீறுற்று, சுற்றுச் சூழல் திறந்த வெளி திரையரங்கு அமைப்புகள், திறந்தவெளி கூட்டரங்கம் போன்ற பல்வேறு பணிகள் மக்களை கவரும் வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. வயதானவர்கள் சென்று பார்க்கும் வகையில் பேட்டரியால் இயங்கும் வாகன வசதி செய்து தரப்படவுள்ளது. தொல்லியல் துறையின் மூலம் ரூ.6 கோடி மதிப்பில் காட்சிப்படுத்தும் கூடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, காட்சிப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொருநை அருங்காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வரும் 20.12.2025 அன்று திறந்து வைத்து, பார்வையிடவுள்ளார்கள்.

தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும்,புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள்.

மேலும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறவுள்ள திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு,நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கண்காணிப்பு பொறியாளர் ஸ்ரீதரன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம் மைதீன்கான், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், நடராஜன், சாந்தி சுபாஷ்,மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் (மேற்கு) தினேஷ் (கிழக்கு) மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, ஆரோக்கிய எட்வின், கண்ணன், அன்பழகன், அருள்மணி, மாரியப்பன், சுபாஷ் தங்கபாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், செல்வசூடாமணி, பிரேம் ஆனந்த், அனிதா, மண்டலத் தலைவர்கள் கதீஜா இக்லாம் பாசிலா, பிரான்சிஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், பகுதி பொறுப்பாளர் அண்டன் செல்லதுரை, கீர்த்தி சுரேஷ், மாமன்ற உறுப்பினர் ஜூலியட் மேரி, விவசாய தொழிலாளர் அணி தலைவர் செண்டு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமையில்

# வேளச்சேரி மேற்கு பகுதியில் துணை முதல்வர் பிறந்தநாள் வாழ்த்தரங்கம்!

## கவிராஜ் வாழ்த்துரை! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, டிச. 10

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு குறிஞ்சி மலரின்! கொள்கை வீரன்!! பல்சுவை வாழ்த்தரங்கம் இன்று (10.12.2025 புதன்கிழமை) மாலை 5 மணிக்கு, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள இராஜலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

வேளச்சேரி மேற்கு பகுதி கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

எம். விநாயகமூர்த்தி, வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி, வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி, மகேஸ்வரி முருகவேல் எம்.சி, கழக த.ரமேஷ், வழக்கறிஞர் த.ஜெகதீசன், சி.பழனி, ந.டில்லிகுமார், எம்.ஏ.சங்கர், சே.மைதிலி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொ.த.மதிவாணன், ஜி.பி. எஸ்.பாலசதீஷ், த.பார்த்திபன், கே.என்.தாமோதரன், க.பாரதிதாசன், எஸ்.முருகவேல், வி. சக்திவேல், தே.கோபி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பல்சுவை வித்தகர் கவிராஜ் மற்றும் குழுவினர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், கனிமொழி என். வி.என்.சோமு எம்.பி, ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, துணை மேயர் மு. மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, க.தனசேகரன் எம்.சி, காசி முத்து மாணிக்கம், எஸ். அருணாச்சலம், எஸ்.குணசேகரன், பேராசிரியர் தீபக்நாதன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், பா.வாசுகி பாண்டியன், பா.சாய் ஜெயகாந்தன், எஸ். பத்மபிரியா, யாழினி, ஜெசிகா, எஸ்.தியாகராஜன்,

துரை கபிலன், இரா.துரைராஜ் எம்.சி, எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி, எஸ். வி.ரவிச்சந்திரன் எம்.சி, நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, வி.ஏ.மதியழகன் எம்.சி, கே. கண்ணன் எம்.சி, மு.இராசா எம்.சி, அயப்பாக்கம் துரை வீரமணி, ஜி.வெங்கடேசன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வேளச்சேரி மேற்கு பகுதி மாவட்டப் பிரதிநிதிகள், வேளச்சேரி மேற்கு பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகத் துணைச் செயலாளர் பொ.த.எழில்வாணன் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி காமராஜர் நகர் ஆர்.சி.எம்.மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மை நலதுறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மிதிவண்டிகளை வழங்கினார். உடன் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், அருட்தந்தை வி.அந்தோனி, மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பள்ளி தலைமை ஆசிரியர் ஜோஸ்பின் ஜேசிந்தா ஜெயசீலி, பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன் வழக்கறிஞர் பெ.வினோத் மாமன்ற உறுப்பினர் மீனாட்சி குமார் உள்ளனர்.

### அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட —

# சுயமரியாதையைப் பாதுகாத்திட மனித உரிமைகள் நாளில் உறுதி ஏற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் — உலக மனித உரிமைகள் நாள் செய்தி!

**சென்னை, டிச.10-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "உலக மனித உரிமைகள் நாளை" யொட்டி, விடுத்த செய்தியில், "அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட, சுயமரியாதையைப் பாதுகாத்திட இந்த மனித உரிமைகள் நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக மனித உரிமைகள் நாள் செய்தி வருமாறு:-

'ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10-ஆம் தேதி, "சர்வதேச மனித உரிமைகள் நாள்" கொண்டாடப்படுகிறது. சாதி, மதம், இனம், நிறம், பாலினம், வயது அல்லது சமூகப் பின்னணியைப் பொருட்படுத்தாமல், நம் ஒவ்வொருவருக்கும் சொந்தமான உலகளாவிய உரிமைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் இது. இந்த உரிமைகளில் கருத்துச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமத்துவம், தடையற்ற கல்வி வாய்ப்புகள் மற்றும் மிக முக்கியமாக, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்கான உரிமை ஆகியவை அடங்கும்.

தனி மனித ஒழுக்கத்தைப் போற்றும் ஒரு நாட்டில் ஜனநாயகம் மேம்படவும், நீதியை சமமாக நிறுவவும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியம். அனைத்து மனிதர்களின் உரிமைகளையும் மதித்து, பிறப்பாலும், தொழிலாலும் எழும் வேறுபாடுகளைக் களைந்து, ஏற்றத்தாழ்வு இன்றி, கல்வி முதல் அனைத்து அடிப்படை வசதிகளையும் அனைவரும் பெற்று மகிழும் நாள் என்று வருகிறதோ, அன்றுதான் இதுபோன்ற நாட்களின் பெருமையும் உயரும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லாத் தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். உலகில் உள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்களே. எல்லாருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ, அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும்.

'1948-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது. மனிதனின் கௌரவத்தையும், அவனின் பிரிக்க முடியாத உரிமைகளையும் அறிந்து, ஏற்றுக்கொள்வதே அவனுக்கு அளிக்கும் சுதந்திரம், நீதி, சமாதானத்தின் அடித்தளம் என்று அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், மக்கள் சுதந்திரத்தை முழு அளவில் அனுபவிப்பதைத் தடுக்கும் பல தடைகள் அகற்றப்பட்டுள்ளன; பல நாடுகளில் இனவெறிச் சட்டங்கள் அகற்றப்பட்டு'விட்டன; பெண்களை இரண்டாம் தர நிலைக்குத் தள்ளும் சட்டங்கள் மற்றும் சமூக நடைமுறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன; சிறுபான்மையினர் தங்கள் மத நம்பிக்கையை எந்தவித அச்ச உணர்வுமின்றி கடைபிடிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

மனிதர்களால் மனிதர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் செயல்படுகின்றன. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, 17-4-1997 அன்று தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் தோற்று விக்கப்பட்டது. 1997 ஏப்ரல் திங்கள் முதல், 2025 செப்டம்பர் திங்கள் வரை இவ்வாணையத்திற்கு 2,84,687 புகார்கள் வரப்பெற்று, அவற்றில் 2,52,573 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டிற்கான மனித உரிமைகள் நாள் கருப்பொருளாக (Theme) ஐக்கிய நாடுகள் சபையானது "மனித உரிமைகள், நமது அன்றாட அத்தியாவசியங்கள்" (Human Rights, Our Everyday Essentials) என்பதை அறிவித்துள்ளது. "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற அடிப்படையில், அனைத்துத் தரப்பினருக்குமான உன்னதமான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் நமது திராவிட மாடல் அரசு, மதம், இனம், மொழி, நிறம், அரசியல் பாகுபாடின்றி அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்திடுவதில் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட, சுயமரியாதையைப் பாதுகாத்திட இந்த மனித உரிமைகள் நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம்.

இவ்வாறு அந்தச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கலந்தாய்வுகள் மூலம் 43,375 பணியிட மாறுதல்கள்! 17,780 புதிய பணியிடங்கள்!

# மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறையில் - 35,702 புதிய பணி நியமனங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!





சென்னை, டிச.10-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் தற்போது வரை; மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் 35,702 புதிய பணிநியமனங்கள், 43,375 - கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல்கள், 17,780 - புதிய பணியிடங்கள், 16,610 பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 522 பதவி உயர்வு ஆணைகளை வழங்கி தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் நேற்று (09.12.2025) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அலுவலகத்தில், 405 பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் 117 வட்டார சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு ஆணை களை வழங்கினார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**பதவி உயர்வு ஆணை வழங்குதல்**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 405 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பகுதி சுகாதார செவிலியர்களாக பதவி உயர்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவர்களுடைய பணி என்பது கிராமத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பது, கர்ப்பிணி தாய்மார்களை பதிவு செய்வது, குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது, ஊட்டச்சத்து வழங்குவது, நலக்கல்வி சம்மந்தமாக உதவுவது, குடற்புழு நீக்கத்திற்கு மாத்திரைகள் வழங்குவது போன்ற சிறப்பான பணிகளை மேற்கொள்ளும் இவர்களது பதவி உயர்வு என்பது பாராட்டுக்குரியது. தொடர்ந்து இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இதுபோன்ற பதவி உயர்வுகளை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. அதேபோல் 117 சுகாதார ஆய்வாளர்களுக்கு வட்டார சுகாதார மேற்பார்வையாளர்களாக பதவி உயர்வு பெறுகிறார்கள். இவர்களது பணி என்பது தொற்று நோய் தொடர்பான அனைத்து விவரங்களும் கிராமங்கள் தோறும் கணக்கெடுப்பது, தொற்றுநோய் பரவும் வாய்ப்புள்ள பகுதிகளில் முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதற்குரிய பணிகள், இயற்கை சீற்றத்தால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை சரிசெய்தல், குடிநீர் ஆதாரங்களை ஆய்வு செய்தல், நோய் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது, குடும்பநலத்திட்டம், பிறப்பு இறப்பு போன்ற பதிவுகள் செய்வது, இவர்களுக்கு தோற்றுவிக்கப்பட்ட இடங்கள் 314 அதில் காலியாக இருந்த 117 இடங்களுக்கு பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு வெளிப்படைத் தன்மையுடன் பணிநியமன ஆணைகளும், பணிமாறுதல் ஆணைகளும், பதவி உயர்வு ஆணைகளும், புதிய பணியிடங்கள் உருவாக்கப்படுவது என்பது தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இந்த துறையின் வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் தற்போது வரை, 35,702 புதிய பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் 43,375 பேருக்கு வெளிப்படைத்தன்மையுடன் பணியிடமாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் இன்று வழங்கப்பட்ட பதவி உயர்வு ஆணையுடன் சேர்த்து இது வரை 16,610 பேருக்கு பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இது வரை 17,780 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆக இது வரை 1,12,945 பேர் இத்துறையின் மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள். இந்த துறையின் வரலாற்றில் முதன்முறையாக புதிய பணியிடங்கள் நியமிக்கப்படும் போதே கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணி ஆணை வழங்கப்படுவது என்பது இதுவே முதல் முறை.

**சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் தொடர்பான கேள்விக்கு**

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்று அமையப் பெற வேண்டும் என்று ஏற்கெனவே முடிவெடுத்து, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அந்த தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த தீர்மானத்தை தொடர்ந்து ஆளுநர் கிடப்பில் வைத்து மிக நீண்ட போராட்டத்திற்கு பிறகு இரண்டாவது சட்டமன்ற தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைத்தார்கள். குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட அந்த தீர்மானம் உள்துறை அமைச்சகத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் உயர்கல்வித்துறை, மருத்துவத்துறை, ஆயுஷ் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு பல்வேறு வகைகளில் தெளிவுரைகள் கேட்டு தொடர்ச்சியாக உள்துறை அமைச்சகம் திருப்பி அனுப்பிக் கொண்டே இருந்தது. இதனைத் திருப்பி அனுப்பும்போது முதலமைச்சர் அவர்கள் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனைப் பெற்று மீண்டும் அவர்கள் அனுப்பிய திருத்தங்களுக்கு பதிலை அனுப்பிக் கொண்டே இருந்தோம். ஆனாலும் திரும்பத் திரும்ப அந்த தீர்மானம் என்பது உள்துறை அமைச்சகத்தால் திரும்பத் திரும்ப அனுப்பப் பட்டுக் கொண்டே இருந்தது. இந்நிலையில் கடந்த அக்டோபர் திங்கள் 15ஆம் தேதி இரண்டாவது முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் அமைய வேண்டும் என்கின்ற மசோதா முதலமைச்சர் அவர்களால் சில கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆளுநர் அவர்கள் அக்டோபர் 15ஆம் தேதி அனுப்பிய மசோதாவை இதுவரை தன் இருப்பிலேயே வைத்திருந்துவிட்டு தற்போது குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. உண்மையிலேயே இரண்டாவது முறை ஆளுநர் அவர்கள் இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்து தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைய உறுதுணையாக இருப்பார் என்று எதிர் பார்க்கப்பட்டது.

சித்த மருத்துவம் என்பது தமிழ்நாட்டில் பல கோடி பேர் விரும்பி ஏற்றுக் கொள்ளும் மருத்துவ முறைகளில் ஒன்று. சங்க காலத்திலிருந்து சித்த மருத்துவத்தின் சிறப்பு என்பது தமிழ்நாட்டில் போற்றக்கூடியது, பாராட்டுக்குரியது. தமிழர்கள் விரும்பி நேசித்த தமிழர்களின் பாரம்பரிய சிகிச்சை முறைகளில் மிகப் பிரதானமானது சித்த மருத்துவம்.

இந்த சித்த மருத்துவத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு ரூ.2 கோடி அளவிற்கு நிதி ஆதாரம் வழங்கி அரும்பாக்கத்தில் உள்ள சித்த மருத்துவமனையில் அலுவலகம் அமைக்கப் பட்டுள்ளது. இந்த அலுவலகம் தயாரான நிலையில் 25 ஏக்கர் நிலம் மாதவரம் பால் பண்ணை பகுதியில் தேர்வு செய்யப்பட்டு சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது. ஆனால் ஆளுநரின் ஒப்புதல் என்பது இரண்டாவது முறையாக ஏமாற்றம் அளிக்கிறது. தமிழர்களின் பாரம்பரிய சித்த மருத்துவத்தை ஏன் ஆளுநர் வெறுக்கிறார் என்று தெரியவில்லை. இது உண்மையிலேயே ஒட்டுமொத்தத் தமிழர்கள் வருத்தப்படுகின்ற மிகப் பெரிய நிகழ்வாகும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.